23.01.2025 பி.வா.சா.1 சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு குறுக்கு விசாரணை தொடர்ச்சி (ஒ.எஸ்.எண்.132/2019) திரு.பொன்ராஜ்.

<u>குறுக்கு விசாரணை தொடர்ச்சி-</u>

1) தபசில் சொத்திற்கு வடபுறம் உள்ள எனது வீட்டை தவிர வேறு வீடு அந்த ஊரில் உள்ளதா என்றால் இல்லை. வாதியின் தந்தை கிரையம் பெற்ற காலமான 1981க்கு முன்பே கிராமம் முழுவதும் நத்தம் நிலவரித்திட்டத்தின் கீழ் செயல்படுத்தப்பட்டு புதிய புல எண்கள் கொடுக்கப்பட்டுள்ளதாக எதிர்வழக்குரையிலும், நிருபண வாக்குமூலத்திலும் சொல்லப்பட்டுள்ள விவரத்திற்கு சியான வருடம் தெரியுமா என்றால் தெரியாது. யூ.டி.ஆர்.திட்டம் 1981ஆம்ஆண்டு செயல்படுத்தப்படவில்லை என்றும், வாதியின் தந்தை கிரையம் பெற்றதாக சொல்லப்படும் காலத்தில் புதிய புல எண் கொடுக்கப்படவில்லை என்றால் தவறு. யூ.டி.ஆர்.திட்டம் செயல்படுத்தப்பட்ட ஆண்டு எனக்குத் தெரியாது என்றால் சரிதான். யூ.டி.ஆர்.திட்டத்தின் கீழ் பட்டா வழங்குவதற்கு என்ன என்ன ஆவணங்கள் சரிபார்க்கப்பட்டது என்பது எனக்கு தெரியாது என்றால் சரிதான், எனது தந்தை கொடுத்திருப்பார். யூ.டி.ஆர்.திட்டத்தின் கீழ் கட்டிடம் கட்டப்பட்ட பகுதிக்கு பட்டா வழங்கப்பட்டது என்றும் காலியிடத்திற்கு பட்டா வழங்கப்படவில்லை என்றால் அதுபற்றி எனக்குத்தெரியாது. யூ.டி.ஆர்.திட்டத்தின் கீழ் நாங்கள் அனுபவம் செய்து வருவதாக எதிர்வழக்குரை மற்றும் முதல் விசாரணையில் சொல்லப்பட்டியிருப்பது தவறு என்று சொன்னால் அது பற்றி என்னால் சொல்ல முடியாது. ஆனால் 2015 ஆம் ஆண்டுக்கு முன்பு நடைபெற்றது எதுவும் எனக்குத் தெரியாது. வாதியின் கிரையப்பத்திரத்தில் மொத்த விஸ்தீரணமாக ஏக்கர் 8 செண்டு 26ன் ஒரு பகுதி தான் வா.சா.ஆ.1 மூலம் வாதியின் தந்தை ஒரு பகுதியை கிரையம் பெற்றுள்ளார் என்றால் சரிதான். ஒரு பகுதியை நாங்கள் கிரையம் பெற்றுள்ளோம். வாதியும், நானும் கிரையம் பெற்றது போக மீதி இடத்தை வேறு நபர்கள் கிரையம் பெற்றியிருப்பார்கள் என்றால் அது பற்றி எனக்குத்தெிாயாது. மொத்த விஸ்தீரணம் ஏக்கர் 8 செண்டு 26 ஒரு செட்டியார் சமூகத்தை சேர்ந்தவருக்குப் பாத்தியப்பட்டு இருந்தது என்றால் அதுபற்றி எனக்குத் தெரியாது. நான் குடியிருந்து வரும் வீடு என்னால் கட்டப்படவில்லை என்றால் சரிதான்.

2) அந்த வீடு எனது தாயாரால் கிரையம் பெற்ற இடத்தில் கட்டப்பட்டதா அல்லது எனது தந்தையாரால் கிரையம் பெற்ற இடத்தில் கட்டப்பட்டதா என்றால் எனக்கு தெரியாது. எனது தாயாரால் கிரையம் பெற்ற இடத்தில் கட்டப்பட்டது. எனது தாயாராரும், எனது தந்தையும் எவ்வளவு இடத்தை கிரையம் பெற்றுள்ளார்கள் என்றால் அது பற்றி தெரியாது. எனது தாய்,தந்தையும் கிரையம் பெற்ற நிலமும், பத்திரத்திற்கும் வருவாய் ஆவணத்திற்கும் ஒத்துப்போய் உள்ளதா என்றால் ஒத்து போய் உள்ளது. எனது தாய்,தந்தை தனித்தனியாக எத்தனை செண்டு எத்தனை சதுர மீட்டர் அளவுகளில் கிரையம் பெற்றுள்ளார்கள் என்றால் எனது தாயார் கிரையம் பெற்ற சொத்து 9 ¾ கெஜம், கிழமேல் 17 ½ கெஜம் அளவுகள் கிரையம் பெற்றுள்ளார்கள். அதனுடைய மொத்த விஸ்தீரணம் கெஜ அளவுகளுக்கு சதுர அடிக்கு சொல்ல இயலாது. எனது தாயார் கிரையம் பெற்ற மேற்படி கெஜ அளவுகளில் எனது தாயாருக்கு பேர்பாதி அளவு என்றால் சரிதான். எனது தந்தையார் கிரையம் பெற்ற இடம் கிழமேல் 27 அடி, தென்வடல் 33 அடி கிரையம் பெற்றுள்ளார். இதன் மொத்த விஸ்தீரணம் எத்தனை அடி என்று தெரியாது என்றால் சரிதான். எனது தந்தை, எனது தாயார் பெற்ற கிரைய ஆவணத்தில் தென்வடல் அளவு ஒரே அளவாக இல்லை வித்தியாசமாக உள்ளது என்றால் சரிதான். வருவாய்துறையில் கொடுக்கப்பட்ட பட்டாவை வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். கொடுக்கப்பட்ட பட்டாவில் தென்வடல்,கிழமேல் அளவுகள் கொடுக்கப்பட்டியிருக்கும் என்றால் சரிதான். எனது தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட பி.வா.சா.ஆ.5 10(1)அடங்கலில் மொத்த விஸ்தீரணம் மட்டும் தான் கொடுக்கப்பட்டியிருக்கும் என்றால் சரிதான். எனது தாய்,தந்தையரின் பெயரில் பட்டா வழங்கப்படவில்லை என்றால் சரிதான். எனது தந்தையின் பெயரில் பட்டா வழங்கப்பட்டுள்ளது. வருவாய்துறை ஆவணங்கள் மோசடியான முறையில் வழங்கப்பட்டுள்ளது என்றும் அது சரியான முறையில் வழங்கப்படவில்லை என்றால் சரியல்ல. அதன் அடிப்படையில் எனது சகோதரியிடம் கிழமேல், தென்வடல் அளவுகள் குறிப்பிடப்படாமல் விஸ்தீரணித்தை குறிப்பிட்டு விடுதலை ஆவணம் பெற்றுள்ளேன் என்றால் சரிதான்.

3) எனது தந்தை பெற்ற கிரைய இடத்தை விட வருவாய்துறை ஆவணத்தில் அதிக இடம் குறிப்பிடப்படப்பட்டுள்ளது என்றும், எனது தந்தையின் கிரைய ஆவணத்திற்கு விரோதமாக எனக்கு கிடைக்கத்தக்கதல்ல என்றால் தவறு.

ஆக்கிரமிப்பு செய்து வாதியின் எதிர்பை மீறி கழிவறை கட்டியுள்ளேன் என்றால் தவறு, கழிவறையை தாண்டி நடைபாதை உள்ளது. வருவாய் துறை ஆவணத்தின் அடிப்படையில் தான் எனக்கு இடம் உள்ளதாக கூறுகிறேன் என்றால் அனுபவத்தின் அடிப்படையில் கோருகிறேன். வருவாய் துறை ஆவணத்தின் அடிப்படையில் உரிமை கோருவதற்கு தடைபட்டுள்ளேன் என்றும் வாதியின் இடத்தை நான் ஆக்கிரமிப்பு செய்துள்ளேன் என்றால் தவறு. வாதி வழக்கில் கோரியுள்ள பரிகாரம் வாதிக்கு கிடைக்கத்தக்கது என்றால் தவறு. வாதி சொல்லியுள்ள காலகட்டத்திற்கு முன்பாகவே நான் கழிவறை கட்டிவிட்டதாக நான் சொல்லுவது வழக்கிற்காக சொல்லும் பொய் என்றால் தவறு. 2015 ஆம் ஆண்டு கழிவறை கட்டிவிட்டேன். 2016 ஆம் ஆண்டு அரசு மானியத்தொகை பெற்றுள்ளேன். அரசு மானியம் கழிவறை கட்டுவதற்கு பெறுவதற்கு மனு ஏதும் கொடுத்தேனா என்றால் இல்லை. கழிவறை கட்டுவதற்கு அனுமதி பெறாமல் கட்டியதாக சொல்லுவதும் மானியம் பெற்றதாக சொல்லும் பி.வா.சா.ஆ.6 ஆவணமும் செல்லத்தக்கதல்ல என்றால் தவறு. பி.வா.சா.ஆ.6 ஆவணத்தில் பணம் பெற்றதாக சொல்லுவதற்கு முழு விவரமும் சொல்லப்படவில்லை என்றால் பாரத் என்று சொல்லப்பட்டுள்ளது. வாதியின் உரிமையை மறுக்கும் வகையில் வீண்கட்சி செய்து வருவதால் வாதியின் வழக்கு செலவுத்தொகையுடன் அனுமதிக்க வேண்டுமென்று சொன்னல் தவறு.

<u>மறுவிசாரணை</u> – இல்லை.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சியின் சாட்சியத்தை தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு வாசித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது.

(ஒப்பம்)C.கருப்பசாமி,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
கோவில்பட்டி,
23.01.2025.